# தூய லூர்து அன்னை திருப்பீடம்


தூய லூர்து அன்னை ஆலயம், 50 ஒ.்.பியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி எண் 6294 0624

(முதல் ஆண்டு)

நாள் 02 - 07 - 2017 இதழ் 32


## திருப்பலி நேரங்கள்

**வாரநாட்களில் - ஆங்கிலம்**

திங்கள் முதல் வெள்ளி வரை மதியம் 12:30 மற்றும் மாலை 6:30மணி

| | |
|---|---|
| **சனி** | மாலை 6:00மணி<br>மற்றும் மாலை 7:30மணி |
| **ஞாயிறு (ஆங்)** | காலை 7.30மணி,11.30மணி<br>மற்றும் மதியம் 1:00மணி |
| **ஞாயிறு (தமிழ்)** | காலை 9:30மணி<br>மற்றும் மாலை 6:30மணி |
| **பொது விடுமுறை** | காலை 9:00மணி (ஆங்)<br>காலை10:00மணி(தமிழ்) |

**சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு**

ஆகியவை ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8:00 மணி முதல் 9:00 மணி வரை தமிழில் நமது ஆலயத்தில் நடைபெறுகிறது. செப உதவி தேவைப்படுவோர் கலந்து கொள்ளவும்.

## பொது காலம் 13ஆம் ஞாயிறு

**முதல் வாசகம் :**
2 அரசர்கள் : 4:8-11,14-16a

**பதிலுரைப் பாடல் :**
திபா : 89:1-2.15-16.17-18

**பல்லவி :** ஆண்டவரின் பேரன்பைப் பற்றி நான் என்றும் பாடுவேன்.

**இரண்டாம் வாசகம்:** உரோ 6:3-4,8-11

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**
"அல்லேலூயா, அல்லேலூயா! நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர்; உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி. அல்லேலூயா."

**நற்செய்தி வாசகம்:** மத்தேயு 10:37-42

## வழிபாட்டு நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| விவிலியப் பகிர்வு | ஞாயிறு | காலை 11:30மணி | (தமிழ்) |
| செபமாலை, லூர்து மாதா நவநாள் | முதல் ஞாயிறு | காலை 8:30மணி | (தமிழ்) |
| மரியாயின் சேனை | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| குழந்தை இயேசு நவநாள் | செவ்வாய் | மாலை 4:30மணி | (தமிழ்) |
| இறை இரக்கச் செபம் | செவ்வாய் | மாலை 5:45மணி | (ஆங்) |
| குழந்தை இயேசு நவநாள் | வியாழன் | மாலை 5:45மணி | (ஆங்) |
| இறை இரக்கச் செபம் | வெள்ளி | மாலை 5:45மணி | (தமிழ்) |
| திருமணி ஆராதனை வழிபாடு தொடர்ந்து திருப்பலி | முதல் வெள்ளி | மாலை 6.30மணி | (ஆங்) |
| திருஇருதய நவநாள் செபம் & திருப்பலி (முதல் வெள்ளி தவிர) | வெள்ளி | மாலை 6:30மணி | (ஆங்) |
| புனித பியோ செபவழிபாடு | மா.தின் 23ம் நாள் | மாலை 8:30மணி | (தமிழ்) |
| சாட்சிய கூடார செபவழிபாடு | முதல் ஞாயிறு | மதியம் 2:00மணி | (தமிழ்) |

## இரண்டாவது காணிக்கை



இவ்வார இரண்டாவது காணிக்கை புனித வின்செண்ட் தே பவுல் சபைக்காக எடுக்கப்படும்.
உங்கள் காணிக்கைக்கு மிகவும் நன்றி.

## விவிலியப் பகிர்வு குழு நற்கருணை ஆராதனை வழிபாடு



நாள் : இன்று, 02 - 07 - 2017
நேரம் : காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி
இடம் : புனித பெர்னதெத் அறை
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நமது பங்கில் மாதத்தின் ஒவ்வொரு முதல் ஞாயிற்றுக்கிழமையும் தமிழில் திருமணி ஆராதனை வழிபாடு நடைபெறுகிறது. இன்று 02-07-2017 மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.**



**நம் குடும்பங்களை திரு இருதய ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கவும், தேவ அழைத்தலுக்காகவும், உலக அமைதிக்காகவும் செபிக்க, இறைவனின் திருப்பாதத்தில் அமர உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

## வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை ஆண்டுப் பெருவிழா - 2017

ஆண்டுதோறும் நமது தூய லூர்து அன்னை ஆலயத்தில் நடைபெறும் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் ஆண்டுப் பெருவிழா இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெறவுள்ளது. வருகின்ற ஞாயிற்றுக்கிழமை (09-07-2017), முதல், ஒன்பது வார நவநாளும், 10-09-2017, ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு பெருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சுரூபத் தேர்ப்பவனியும் நடைபெறும்.
அனைவரும் வருக!
வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் ஆசீர் பெறுக!



புனித லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

## குருக்களின் ஆண்டுத்தியானம் 2017 - ஜுலை 3 முதல் 7 வரை

நமது அருட்தந்தையர்கள் 03-07-2017 (திங்கள்) முதல் 07-07-2017 (வெள்ளி) வரை ஆண்டு தியானத்திற்கு செல்வதால், அந்நாட்களில் திருப்பலி நடைபெறாது. நற்கருணை வழிபாடு மட்டும் நடைபெறும்.

**07-07-2017 மாதத்தின் முதல் வெள்ளி.** அன்று மாலை 6.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்.

ஆவியானவரின் வல்லமையை அனுபவிக்க, நமது அருட்தந்தையர்களுக்காக செபிப்போம்.

# சிந்தனை

அன்புடையீர்,
பொதுக்காலம் ஆண்டின் 13ஆம் ஞாயிறைக் கொண்டாட இறை அழைப்பை ஏற்று நம் ஆலயத்தில் ஒருமனதோராய் ஒன்றிணைந்து வந்துள்ள இயேசுவின் சீடர்களாகிய உங்கள் அனைவரையும் அன்புடன் இத்திருப்பலிக்கு வரவேற்கிறோம். கடந்த சில வாரங்களாக இயேசுவின் சீடராக வாழ, மாற விரும்புவோருக்கு இயேசு அளித்த அறிவுரைகளையும் ஆறுதல்களையும், அவர்கள் எதிர்கொள்ளும் துன்பங்கள் மற்றும் அதன் வெகுமதிகளைப்பற்றியும் திருத்தூதர் மத்தேயு எடுத்துரைக்கின்றார். இயேசு கூறுவது கடுமையாயாக் தோன்றினாலும் அதற்கான பரிசின் சிறப்பைப் பதிவுச் செய்கிறார். தன் சீடர்களை ஏற்றுக்கொள்பவர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்கிறார்கள். இயேசுவை ஏற்றுக்கொள்பவர்கள் தந்தையாம் கடவுளையும் ஏற்றுக்கொள்கிறார்கள். அதற்கான கைம்மாறு பெறாமல் போகார் என்பதே ஆகும்.

இன்றைய நற்செய்தி கிறிஸ்தவ வாழ்க்கையில் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. இயேசுவின் பெயரில் ஒருவரை வரவேற்பது என்பது இயேசுவையே நாம் வரவேற்பது போல் ஆகும். எனவே நம் அன்றாட வாழ்வில் செய்தியைக் கொண்டு வருகின்ற தூதரை ஏற்பதும் மற்றும் இறையன்பின் சாட்சிகளாக வாழ்வதும் நமது கடமையாகும். இந்த விருந்தோம்பல் அளவில் சிறிதாக இருந்தாலும் அதற்கும் கைம்மாறு நம் இறைவன் தருவார் என்று அவர் அளித்த நம்பிக்கையான வார்த்தைகளை உள்ளத்தில் பதிவு செய்து இத்திருப்பலியில் இறைஇயேசுவில் இணைந்திடுவோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**

# சிங்கப்பூர் உயர் மறைமாவட்டம்
# தமிழ் திருப்பலி நடைபெறும் நேரங்களும் இடங்களும்

| | | |
|---|---|---|
| புனித லூர்து அன்னை ஆலயம்<br>50 ஓபியர் ரோடு | : | ஞாயிறு காலை 9.30<br>ஞாயிறு மாலை 6.30<br>பொது விடுமுறை நாட்கள் காலை 10.00 |
| உயிர்த்த ஆண்டவர் ஆலயம்<br>91 தோ பா யோ சென்ட்ரல் | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மதியம் 4.00 |
| புனித பிரான்சிஸ் அசிசி ஆலயம்<br>200 பூன் லே அவின்யூ | : | மாதத்தின் முதல் ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.30<br>மாதத்தின் ஐந்தாவது ஞாயிறு மாலை 7.30 |
| புனித அந்தோணியார் ஆலயம்<br>25 உட்லாண்ட்ஸ் அவின்யூ 1 | : | மாதத்தின் முதல் சனி மாலை 7.30<br>மாதத்தின் இரண்டாவது சனி மாலை 7.30 |
| நற்கருணை ஆலயம்<br>1, காமன்வெல்த் டிரைவ் | : | மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மாலை 7.00 |
| நட்சத்திர மாதா ஆலயம்<br>10, ஈசூன் 22வது தெரு | : | மாதத்தின் இரண்டாவது ஞாயிறு மாலை 6.30<br>மாதத்தின் மூன்றாவது சனி மாலை 6.30 |
| கிறிஸ்து அரசர் ஆலயம்<br>2221, அங் மோ கியோ அவின்யூ 8 | : | மாதத்தின் நான்காவது ஞாயிறு மாலை 6.30 |
| சம்மனசுகளின் இராக்கினி ஆலயம்<br>5, புக்கிட் பாதோக் அவின்யூ 2 | : | மாதத்தின் நான்காவது சனி மாலை 8.00 |

**அருள்தந்தையர்**

அருள்தந்தை மைக்கேல் சீத்தாராம் (frmichaelsitaram@gmail.com) - பங்குத்தந்தை
அருள்தந்தை தே. நித்திய சகாயராஜ் (nithiya@catholic.org.sg) - உதவிப் பங்குத்தந்தை
அருள்தந்தை பால் இயோ (fryeopaul@gmail.com) - உதவிப் பங்குத்தந்தை

**பங்கு அலுவலகம்**

(ololsec@gmail.com)

இணையதள முகவரி: http://www.tamilcatholic.org.sg; http://facebook.com/ChurchOfOurLadyOfLourdesSingapore

அன்புப் பங்குமக்களே! தாங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே உங்கள் கைத் தொலைபேசியை அணைத்து வைக்குமாறும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.